


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 214 | 4 Pages | 03.03.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 03 | இதழ்: 214 | 4 பக்கங்கள் | 03.03.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

# சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.249 கோடி செலவில் அமைந்த நிதிநுட்ப கோபுரம்; முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்

உலகம் டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் நிதிநுட்ப துறை சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நிதிநுட்ப துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், தமிழ்நாடு முதல்அமைச்சர் 17.06.2023 அன்று சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் 56 ஏக்கர் நிலப்பரப்பில், நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், அதில் முதற்கட்டமாக 5.56 லட்சம் சதுர அடி கட்டிட பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) என்ற அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்.

இதற்காக, சென்னை நந்தம்பாக்கத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று கலந்து கொண்டார். இந்த நிதிநுட்ப கோபுர கட்டிடம் 249 கோடி ரூபாய் செலவில் இரண்டு அடித்தளங்கள், தரை மற்றும் பதினொன்று தளங்களுடன் 5.56 லட்சம் சதுர அடி பரப்பளவில், அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டு தமிழ்நாடு முதல்அமைச்சரால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.




நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ள உயர்தர அலுவலக இடங்கள் நிதிநுட்ப கோபுரத்தில் (Fintech Tower) அமைக்கப்பட்டுள்ளன. LEED Platinum Green Building தரத்துடன் உருவாக்கப்பட்ட இக்கட்டிடம், வாகன நிறுத்த வசதிகள், 250 மற்றும் 50 இருக்கை வசதிகளை கொண்ட கூட்டரங்கங்கள், உணவகங்கள், உடற்பயிற்சி கூடம், குழந்தைகள் பராமரிப்பு மையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. தடையற்ற வணிக சூழலை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உலக தரத்திலான உள்கட்டமைப்புடன் உருவாக்கப்பட்ட இக்கட்டிடம், தமிழ்நாட்டின் நிதிநுட்ப வளர்ச்சிக்கான முக்கிய மையமாக திகழும்.

இந்நிகழ்ச்சியின்போது, M/s. Prime Forex Pvt. Ltd., M/s. Simptra Technologies Pvt. Ltd., மற்றும் M/s. MidFin Wealth Pvt. Ltd. ஆகிய நிறுவனங்களுக்கு நிதிநுட்ப கோபுரத்தில் அலுவலக இடங்கள் ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை முதல்அமைச்சர் வழங்கினார்.

இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், தலைமை செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., டிட்கோ தலைவர் சந்தியா வேணுகோபால் சர்மா இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப., டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., டிட்கோ நிர்வாக இயக்குநர் சுவேதா சுமன், இ.ஆ.ப., தொழில் மற்றும் நிதி துறையை சார்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மக்கள் தாராபுரம் டு பொள்ளாச்சி சாலையில் திடீர் சாலை மறியல்

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்த கவுண்டச்சி புதூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கணபதி நகர், ராஜா நகர், கோகுலம் காலனி, வர்ஷினி நகர், வள்ளலார் நகர், அமராவதி நகர், கோல்டன் சிட்டி உட்பட்ட பகுதிகளில் சுமார் 20க்கும் பகுதிகளை 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர். இங்கு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படைவசதிகள்ஆனதார்சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்கு புறநகர் காவல் நிலையம் வைக்க வேண்டும்.



மேலும் இங்கே இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழிப்பறிப்பு மற்றும் திருட்டு நடைபெற்று வருகிறது.

ஆகவே இதனை உடனடியாக செய்து தர வேண்டி அப்பகுதி குடியிருப்போர் நலச் சங்கத்தின் தலைவர் கருப்பையா தலைமையில் மக்கள் தாராபுரம் டு பொள்ளாச்சி சாலையில் திடீர் சாலை மறியல் செய்தனர் இதனால் அங்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து ஏற்பட்டது இதில் குடியிருப்போர் நலச் சங்கத்தின் செயலாளர் சேது பொருளாளர் ஜான் அலெக்சாண்டர் ஒருங்கிணைப்பாளர் லிங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்

# குண்டடத்தில் எம்.எல்.ஏ. நிதியில் நிழற்குடை அமைப்பு – புதுப்பாளையத்தில் புதிய நியாயவிலைக்கடை திறப்பு.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மூலம் சங்கரண்டாம்பாளையம் ஊராட்சி தாளக்கரை ராமன் காடு பேருந்து நிலையத்தில் ரூ.6.00 இலட்சம் மதிப்பில் புதிய பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.





மேலும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை சார்பில் சங்கரண்டாம்பாளையம் ஊராட்சி புதுப்பாளையத்தில்புதியபகுதிநேரநியாயவிலைக்கடை திறக்கப்பட்டது. இந்த கடை மூலம் அப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் எளிதில் கிடைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் கயல்விழி, மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூரில் பிரம்மோற்சவ விழா – 2000 பேருக்கு அன்னதானம், பெண்களுக்கு துணி வழங்கல்

அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்ற பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு சிறப்பு அன்னதான நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பத்மாவதி திருமண மண்டபம் மற்றும் ஸ்ரீ வாரி எண்டரைசஸ் சார்பாக மொத்தம் 2000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு அதிகாலை முதலேதிரண்டிருந்தபக்தர்கள்அமர்ந்து அன்னதானத்தை பெற்றுக்கொண்டனர்.




மேலும், சமூக நலத்திட்டத்தின் ஒரு பகுதியாக 1000 பெண்களுக்கு ஜாக்கெட் துணி மற்றும் 1000 பேருக்கு டவல்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியை திரு. R. பத்மநாதன் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்தார். பக்தர்களும் பொது மக்களும்பெருமளவில்கலந்துகொண்டுநிகழ்ச்சியை சிறப்பித்தனர். பிரம்மோற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த அன்னதான மற்றும் துணி வழங்கும் நிகழ்ச்சி பக்தர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

ஏற்பாட்டாளர்களின் சமூகப் பொறுப்புணர்வு அனைவராலும் பாராட்டப்பட்டது. விருந்தினராக வாட்டர்பிளான் ஸ்டார் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.






அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

திறனறிந்து தேர்ந்து கொளல்

விளக்கம்:

அறம் உணர்ந்தவராய்த் தன்னை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை, கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

# லண்டன், பாரீஸ் நகரங்களுக்கு திட்டமிட்டபடி விமான சேவை தொடரும்: மலேசியா ஏர்லைன்ஸ் அறிவிப்பு




கோலாலம்பூர்

மேற்காசியாவில் ஈரான் நாட்டுக்கு எதிரான இஸ்ரேல் மற்றும் அமெரிக்க நாடுகளின் வான்வழி தாக்குதலை தொடர்ந்து ஏற்பட்டு உள்ள பதற்றம் நிறைந்த சூழலில், பல்வேறு நாடுகளை சேர்ந்த விமான நிறுவனங்களும் தங்களுடைய விமான சேவையை தற்காலிக அடிப்படையில் ரத்து செய்தும் அல்லது வேறு பகுதிகளுக்கு திருப்பி விட்டும் வருகின்றன.

இந்நிலையில், லண்டன் மற்றும் பாரீஸ் நகரங்களுக்கான தங்களுடைய அனைத்து விமான சேவைகளும் திட்டமிட்டபடி தொடரும் என மலேசியா ஏர்லைன்ஸ் நிறுவனம் இன்று அறிவித்து உள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டு உள்ள செய்தியில், பாதிக்கப்பட்ட வான்வெளியை தவிர்த்து, மாற்று விமான பாதையை பயன்படுத்தி நாங்கள் சேவையை தொடர்கிறோம். எனினும் உயரிய பாதுகாப்பு தரநிலைகளை கடைபிடிக்கிறோம் என்று தெரிவித்து உள்ளது.

இதனால், பயண நேரம் சிறிதளவு கூடுதலாக இருக்கும் என்றபோதும், எங்களுடைய பயணிகள் மற்றும் விமான ஊழியர்களின் பாதுகாப்பே எப்போதும் எங்களுக்கு முன்னுரிமையாக இருக்கும்.

இந்த பகுதியில் கடுமையான சவால்களை பயணிகள் எதிர்கொண்டு வருகின்றனர். அதனை நாங்கள் புரிந்து வைத்தருக்கிறோம். அதனால், அவசர பயணத்திற்கான தேவை உள்ளவர்கள் அல்லது பயணிகளுக்கு எங்களின் குழு உதவிட தயாராக உள்ளது என்றும் தெரிவித்து உள்ளது.

# மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க நடவடிக்கை; மத்திய மந்திரி தகவல்



ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா 28ம் தேதி அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அவரது குடும்பத்தினர், ஈரான் பாதுகாப்புத் துறை மந்திரி அமீர், ஈரான் புரட்சிப்படை தளபதி முகமது உள்பட பலர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த போர் பதற்றத்தால் மத்திய கிழக்கில் உள்ள பல்வேறு நாடுகள் தங்கள் வான்பரப்பைமூடியுள்ளன.விமானசேவையும்முற்றிலும்நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வரும் லட்சக்கணக்கான இந்தியர்கள் நாடு திரும்ப முடியாத சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், மத்திய கிழக்கில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய மந்திரி பிரஹலாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கர்நாடகாவின் பெங்களூருவில் செய்தியாளர்களை சந்தித்த பிரஹலாத் ஜோஷி, உலகின் எந்த பகுதியிலாவது இந்தியர்களுக்கு சிக்கல் ஏற்பட்டால் அவர்கள் பத்திரமாக நாடு திரும்புவதை மத்திய அரசு உறுதி செய்யும்.

ரஷியா உக்ரைன் போரில் உக்ரைனில் சிக்கிய இந்தியர்களை பத்திரமாக மீட்டோம். இந்தியர்களை பத்திரமாக மீட்பதுதான் எங்கள் முன்னுரிமை. மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்கள் பதற்றப்பட வேண்டாம். இந்தியர்கள் அனைவரையும் பத்திரமாக நாட்டிற்கு அழைத்துவர மத்திய அரசு தயாராகி வருகிறது என்றார்.

# சென்னைக்கு சுப்ரீம் கோர்ட்டு கிளை வருகிறது; மத்திய அரசு கெஜட்டில் வெளியீடு

நாட்டில் நீதி வழங்கும் அதிகாரம் படைத்த உச்சபட்ச அமைப்பாக சுப்ரீம் கோர்ட்டு உள்ளது. இந்நிலையில், நாடு முழுவதும் தேங்கியுள்ள அதிக வழக்குகளை விரைவில் தீர்க்கவும், செலவுகளை குறைக்கவும் மற்றும் நீதிக்கான அணுகலை அதிகரிக்க செய்யும் நோக்கிலும் கூடுதலாக சுப்ரீம் கோர்ட்டு கிளைகளை உருவாக்க முடிவாகி உள்ளது. இது தொடர்பான தகவலை மத்திய அரசு கெஜட்டில் வெளியிட்டு உள்ளது.

இதன்படி, புதுடெல்லியில் அரசியல் சாசன அமர்வு ஒன்று செயல்படும். இது தவிர்த்து வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு மண்டலங்களில் 4 நிரந்தர மண்டலகிளைகள்உருவாக்கப்படும். அவை முறையே புதுடெல்லி, சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய நாட்டின் முக்கிய 4 நகரங்களில் அமையும்.

இதில், புதுடெல்லியில் உள்ள அரசியல் சாசன அமர்வானது, அரசியல் சாசன முக்கியத்துவம் கொண்ட வழக்குகளை மட்டும் விசாரிக்கும். எந்தெந்த வழக்குகள் அரசியல் சாசன முக்கியத்துவம் கொண்ட வழக்குகள் என்று முடிவு செய்யும் தனிப்பட்ட அதிகாரம் இந்திய தலைமை நீதிபதிக்கு இருக்கும்.

இதன்படி, இந்த அரசியல் சாசன முக்கியத்துவம் கொண்ட வழக்குகளை, புதுடெல்லியில் உள்ள அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும். அது தவிர்த்த பிற வழக்குகளை சுப்ரீம் கோர்ட்டின் முழு நீதிமன்ற அதிகாரத்துடன் பிற 4 நிரந்தர மண்டல கிளைகள் விசாரணை மேற்கொள்ளும். இதன்படி, தெற்கு மண்டலத்திற்கான சுப்ரீம் கோர்ட்டின் கிளை சென்னையில் வருகிறது.

அந்த அமர்வில், அரசியல் சாசன அமர்வுக்கான வழக்குகளை தவிர்த்து, பிற வழக்குகள் விசாரிக்கப்படும். இதில், தமிழகம், கேரளம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா மற்றும் யூனியன் பிரதேசங்களான புதுச்சேரி மற்றும் லட்சத்தீவு ஆகியவற்றின் வழக்குகள் விசாரிக்கப்படும்.

# ராகுல் காந்தியை சகோதரர் என குறிப்பிடாதது ஏன்? முதல்அமைச்சருக்கு அண்ணாமலை கேள்வி



சென்னை, மார்ச். 3

தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று தனது 73வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். அவருக்கு அமைச்சர்கள், திமுக எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

அந்தவகையில், நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்திதி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்தநாள்வாழ்த்து தெரிவித்திருந்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். நீங்கள் நல்ல ஆரோக்கியம், வலிமை மற்றும் நீண்ட ஆயுள் பெற்று தமிழக மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வாழ்த்துகிறேன்" என தெரிவித்திருந்தார்.

இதற்கு, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் "உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி" என தெரிவித்திருந்தார். ஆனால், இதற்கு முன்னர் கடந்த ஆண்டு ராகுல் காந்தி பிறந்தநாள்வாழ்த்து தெரிவித்தபோது அதற்கு, "அன்புள்ள சகோதரரே, தொலைபேசியில் உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கும் அன்பான வார்த்தைகளுக்கும் நன்றி" என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ராகுல் காந்தியை 'சகோதரர்' என்று குறிப்பிட்டிருந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த முறை 'சகோதரர்' என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை. இது குறித்து அண்ணாமலை தனது எக்ஸ் தள பக்கத்தில் விமர்சனம் ஒன்றை வைத்துள்ளார்.

அதில் அவர், "போன வருஷம்: புரோ, புரோ!... இந்த வருஷம்: புரோ இல்லை... ஏன் புரோ?" என அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

# சந்திர கிரகணத்தின்போது திருவண்ணாமலை கோவில் நடை திறந்திருக்கும் என அறிவிப்பு



திருவண்ணாமலை,

திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். இந்த நிலையில் மாசி மாதத்திற்கான பவுர்ணமி கிரிவலம் இன்று (திங்கட்கிழமை) மாலை 6.29 மணிக்கு தொடங்கி நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை 5.52 மணிக்கு நிறைவடைகிறது.

மாசி மாத பவுணர்மியையொட்டி நாளை திருவண்ணாமலையில் கிரிவலம் செல்ல லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் நாளை மாலை 3.20 மணிக்கு சந்திர கிரகணம் தொடங்கி இரவு 7.53 மணிக்கு முடிவடைகிறது.

சந்திர கிரகணம் நிகழும் நாளன்று பெரும்பாலான கோவில்களில் நடை அடைப்பது வழக்கம். ஆனால் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் சந்திர கிரகணத்தின் போது நடை அடைக்காமல் வழக்கம் போல் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் சந்திர கிரகணம் முடியும் போதும், சூரிய கிரகணம் தொடங்கும் போதும் அருணாசலேஸ்வரர்கோவிலில்தீர்த்தவாரி நடைபெறுவது வழக்கம். அதன்படி நாளை மாலை 5.10 மணிக்கு கிரகணம் முடியும் போது கோவில் வளாகத்தில் உள்ள பிரம்ம தீர்த்த குளத்தில்தீர்த்தவாரி நடைபெற உள்ளதாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கச்சத்தீவு புனிதப்பயணத்துக்கு இந்திய கடலோர காவல் படை முழு பாதுகாப்பு



சென்னை, மார்ச். 3

கச்சத்தீவில் உள்ள புகழ்பெற்ற புனித அந்தோணியார் தேவாலயத்தில் பிப்ரவரி 27 முதல் 28 வரை வருடாந்திர 2 நாள் விழா நடைபெற்றது. இந்த திருவிழா இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களால் பெரிதும் மதிக்கப்படுவதாகும்.

இத்திருவிழாவில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களை சேர்ந்த மொத்தம் 3,741 புனிதப்பயணிகள் பிப்ரவரி 27 அன்று கச்சத்தீவுக்கு புறப்பட்டனர். ஏராளமான இயந்திரமயமாக்கப்பட்ட மற்றும் பிற படகுகள் ராமேஸ்வரத்தில் இருந்து சர்வதேச கடல் எல்லை கோடு IMBL வரை இந்திய கடலோர காவல்படையினரால் அழைத்து செல்லப்பட்டு, பின்னர் அவர்கள் தங்களது பயணத்துக்காக இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கச்சத்தீவில் இரவு தங்கி விழாவில் பங்கேற்ற பிறகு, அவர்கள் பாதுகாப்பாக தாய்நாட்டிற்கு திரும்பினர். மீன்பிடி படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இந்திய கடலோர காவல்படையின் கடல் மற்றும் வான் பிரிவுகளின் விழிப்பான பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளும் செயல்பட்டன.

# சாத்தான்குளம் தந்தைமகன் கொலை வழக்கில் வரும் 23ந்தேதி தீர்ப்பு



கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரிகளான ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய 2 பேரை சாத்தான்குளம் போலீசார் விசாரணை என்ற பெயரில் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று கொடூரமாகதாக்கியதில் இருவரும் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில் அப்போதைய சாத்தான்குளம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் உள்பட 9 போலீசார் கொலை வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரித்து வந்த நிலையில், பின்னர் வழக்கின் விசாரணை சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது.

தொடர்ந்து சி.பி.ஐ. அதிகாரிகள்விசாரணைநடத்தி குற்றம்சாட்டப்பட்ட 9 காவலர்கள் மீது கோர்ட்டில் குற்றப்பத்திரிகைதாக்கல் செய்தனர். இதற்கிடையில் கைதான இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் அப்ரூவராக மாறுவதாக கூறியது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த வழக்கின் விசாரணை நீண்டு கொண்டே சென்றது.

இதற்கிடையில் இந்த வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. தரப்பில் கூடுதலாக 400 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ப்பட்ட நிலையில், தொடர்ந்து கோர்ட்டில் சாட்சி விசாரணைகள் நடைபெற்று வந்தன. தற்போது அனைத்து தரப்பு விசாரணைகளும் நிறைவடைந்த நிலையில், விரைவில் இந்த வழக்கில் தீர்ப்பு வெளியாக உள்ளது.

இதன்படி சாத்தான்குளம் தந்தைமகன் கொலை வழக்கில் வரும் 23ந்தேதி தீர்ப்பு வழங்கப்படும் என மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சம்பவம் நடந்து சுமார் ஐந்தரை ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், தற்போது இந்த வழக்கில் தீர்ப்பு குறித்த அறிவிப்பு வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுக்கு எதிரான போரில்... இளைஞர்களின் காலடிச் சத்தம்! அருண்ராஜ்




தவெக சார்பில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் இன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு மாரத்தானில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்றனர். இந்த மாரத்தானை தவெக நிர்வாகி அருண்ராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில், நாமக்கல்லில் நடைபெற்ற மாரத்தான் போட்டி குறித்து, தவெக நிர்வாகி அருண்ராஜ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

போதைப்பொருள்களுக்கு எதிரான போரில்... இளைஞர்களின் காலடிச் சத்தம்!

இன்று நடைபெற்ற போதைப்பொருள்களுக்கு எதிரான மாரத்தானில் திரண்ட இளைஞர் பட்டாளம் சொல்வது ஒன்றே ஒன்றுதான்: "எங்கள் பாதை, போதையில்லாப் பாதை!"

இது வெறும் விழிப்புணர்வு ஓட்டமல்ல; போதை இருளில் சிக்கியுள்ள தமிழகத்தை மீட்கப் புறப்பட்ட புரட்சி ஓட்டம்!

போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்தத் தவறிய, காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் தமிழக முதல்அமைச்சரை, அவரது ஆழ்ந்த உறக்கத்திலிருந்து தட்டியெழுப்ப முயலும் ஓட்டம் இது.

களத்தில் ஓடிய கால்களுக்கும், விழிப்புணர்வை விதைத்த நெஞ்சங்களுக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் புரட்சிகரமான வாழ்த்துகள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமரை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபட்ட காங்கிரசாரை கைது செய்க: நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்



சென்னை,

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

நாகர்கோவிலில் நேற்று முப்பது நபர்களின்துணையோடு காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் நவீன், பாரதப் பிரதமரின் உருவ பொம்மையைக் கயிற்றில் கட்டி தூக்கில் தொங்கவிட்டிருப்பதும், அவர்களைக் கைது செய்யாமல் காவல்துறை வேடிக்கை பார்ப்பதும் வன்மையான கண்டனத்திற்குரியது.

நாட்டை வழிநடத்திச் செல்லும் பிரதமர், தமிழகத்திற்கு வந்திருக்கும் வேளையில், அவரது பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் விதமாகவும், அவரை இழிவுபடுத்தும் விதமாகவும் காங்கிரஸ் கட்சியினர் செயல்படும் வேளையில், அதைக் கண்டுகொள்ளாத அளவிற்கு, திமுக அரசின் கண்ணை அரசியல் காழ்ப்புணர்ச்சி மறைத்துவிட்டதா?

₹4,400 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தமிழகத்திற்குப் பிரதமர் அவரகள் வழங்கியதற்கு நன்றி கூறாவிட்டாலும் பரவாயில்லை, அடிப்படை சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய அடிப்படை கடமையைக் கூட திமுக அரசு மறந்துவிட்டதா?

உண்மையில், இது போன்றதொரு செயலில் ஈடுபட்ட காங்கிரஸைக் காட்டிலும், அதை வேடிக்கை பார்க்கும் திமுக அரசின் அலட்சியம் பெரும் கண்டனத்திற்குரியது. அரசியல் கணக்குகளைத் தாண்டி, தான் வகிக்கும் பொறுப்பினை உணர்ந்து, பிரதமரை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினரை திமுக அரசு உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்!"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 210 தொகுதிகளில் வென்று அதிமுக ஆட்சியமைக்கும்: எடப்பாடி பழனிசாமி பேச்சு



மதுரை,

மதுரை என்று சொன்னாலே நமக்கு நியாபகம் வருவது மீனாட்சி அம்மன். திமுக கூட்டணி இன்னும் பிரசாரம் மேற்கொள்ளவில்லை. ஆனால் நமது கூட்டணி தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டது. தமிழகத்தை யார் ஆளவேண்டும்.. யார் ஆளக்கூடாது என்பதை தீர்மானிக்க சட்டமன்ற தேர்தல் நடக்க உள்ளது.

நமது கூட்டணி 210 இடங்களில் வென்று ஆட்சி அமைக்கும். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போட்டியிட்ட மாவட்டம் தென் மாவட்டம். தென் மாவட்டங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி பலமாக உள்ளது. மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டும். தமிழகத்தில் 31 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த கட்சி அதிமுக.

மோடி பொறுப்பேற்றவுடன், இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது. இந்தியாவை பார்த்து உலக நாடுகள் பொறாமைப்படும் அளவுக்கு நமது நாட்டின் வளர்ச்சி உள்ளது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் ஒதுக்கி வருகிறார். காற்றில் கூட ஊழல் செய்த கட்சி திமுக. விஞ்ஞான முறைப்படி ஊழல் செய்யும் கட்சி திமுக. ஊழல்களால் கலைக்கப்பட்ட ஒரே கட்சி திமுக.

அதிமுக ஆட்சிக்காலத்தில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மத்திய அரசிடம் இருந்து பெற்றோம். அதிமுக ஆட்சிக்காலத்தில் பல திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். வருகிற சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெற வேண்டும். குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும். வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அனைவரும் சுறுசுறுப்பாக செய்லபட வேண்டும். மீண்டும்வலிமையானபாரதம், வளமான தமிழகம் அமைக்கப்பட வேண்டும்."

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.4.62 கோடியில் திருவொற்றியூர் படகுக் குழாமினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் மேயர் பிரியா



சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

'இன்று (01.03.2026) மேயர் ஆர்.பிரியா, திருவொற்றியூர் மண்டலம், வார்டு3, அன்னை சிவகாமி நகரில் ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட திருவொற்றியூர் படகுக் குழாமினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர் மேயர் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்களால் மணலி மற்றும் மாதவரம் ஏரிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்ட படகுக் குழாம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை ஏராளமான பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதைப்போல தற்போது திருவெற்றியூர் மண்டலத்திலும், புதிய படகுக் குழாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். தமிழ்நாடு முதல்அமைச்சர், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

திருவொற்றியூர் அன்னை சிவகாமி நகரில் 20.17 ஏக்கர் பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட்ட ஏரியில் ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் படகுக் குழாம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அழகிய நுழைவாயில்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான நுழைவாயில், காத்திருப்பு அறை, உணவகங்கள், டிக்கெட் வழங்கும் பகுதி, ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறைகள், முதலுதவி அறை, மீட்பு நடவடிக்கை வசதிகள், குடிநீர் வசதிகள், படகு சவாரிக்கான பல்வகை படகுகள், மின்விளக்கு வசதிகள், கம்பி அமைப்புடன்கூடிய சுற்றுச்சுவர், உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த படகு குழாமில் 8 இருக்கை விசைப் படகு, 4 இருக்கை மிதிப்படகு, 2 இருக்கை மிதிப்படகு, 1 வாட்டர் ஸ்கூட்டர், 1 இருக்கை கயாக், 2 இருக்கை கயாக், 3 அக்வா ஜோர்பிங், 2 அக்வா ரோலர் ஆகிய வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு, மண்டல அலுவலர் தி.பத்மநாபன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் ஆர்.லட்சுமி பிரியா, தலைமை மேலாளர் வெங்கடேஷ், மாமன்ற உறுப்பினர் போ.தமிழரசன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொன்முடி மீதான செம்மண் குவாரி முறைகேடு வழக்கில் ஏப்.2ந்தேதி தீர்ப்பு

கடந்த 200611ஆம் ஆண்டு காலத்தில் திமுக ஆட்சியில், விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகேயுள்ள பூத்துறை கிராமத்தில் உள்ள செம்மண் குவாரியில் அளவுக்கு அதிகமாக அனுமதியை மீறி 2 லட்சத்து 64 ஆயிரத்து 644 லோடு லாரிகளில் செம்மண் எடுத்ததன் மூலமாக அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., அவரது மகன் பொன்.கவுதமசிகாமணி, ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன், சதானந்தம், கோதகுமார், கோபிநாதன், லோகநாதன் ஆகிய 8 பேர் மீது கடந்த 2012ஆம் ஆண்டில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இவ்வழக்கு விசாரணை, விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட லோகநாதன் ஏற்கெனவே உடல்நலக்குறைவால் இறந்துவிட்டார். இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை கடந்த அக்டோபர் மாதம் முடிவடைந்தது. 57 சாட்சிகளில் 30 பேர் அரசு தரப்புக்கு பாதகமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வழக்கு விசாரணை இன்று மீண்டும் விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரனைக்கு வந்தபோது மாவட்ட இரு தரப்பு வாதம் நிறைவடைந்ததால் இவ்வழக்கில் தீர்ப்பினை ஏப்ரல் 2 ஆம் தேதி அறிவிப்பதாக மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி மணிமொழி அறிவித்தார்.

# தூத்துக்குடி தீப்பெட்டி குடோனில் தீ விபத்து உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு மு.க.ஸ்டாலின் நிவாரணம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாண்டவர்மங்கலம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான தீப்பெட்டி குடோனில் இன்று (02.03.2026) காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த தீ விபத்தில் கோவில்பட்டி வட்டம், கொடுக்கம்பாறை கிராமம், விஜயாபுரி பகுதியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 27)த/பெ.சமுத்திரம்

என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில்பலத்தகாயமடைந்து தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவரும் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, பேரநாயக்கன்பட்டியைச் சேர்ந்த சுடலைமுத்து (வயது 42) மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோவில்பட்டி வட்டம், கிழவிபட்டி கிராமம், துரைசாமிபுரம் பகுதியில் வசித்துவரும் கணேசன் (வயது 47) ஆகிய இருவருக்கும் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 லட்சமும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# அடையாறு பகுதியில் 2 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: இழப்பீட்டுத் தொகை ரூ.12.40 லட்சம் வசூல்




தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்ட செய்தி அறிக்கையில்,

18.02.2026 அன்று தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை அமலாக்க கோட்டத்திற்குட்பட்ட சென்னை/வடக்கு, மற்றும் சென்னை/மையம் அதிகாரிகள் அடையார் கோட்டம் அடையாறு மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்ட போது 2 உயர் மதிப்புள்ள மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வாயிலாக ரூ. 12,39,426 / 2 மின் இணைப்புக்கு இழப்பீட்டு தொகையாக மின் நுகர்வோருக்கு விதிக்கப்பட்டது.

மேலும், சம்பந்தப்பட்ட மின்நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நடவடிக்கையைதவிர்க்க முன் வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.62,000/ செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு சம்பந்தமான தகவல்களை செயற்பொறியாளர்/ அமலாக்கம்/ சென்னை கைபேசி 9445857591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஞ்சிபுரத்தில் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 1000 பொதுமக்களுக்கு சுட சுட பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்




தமிழ்நாடு முதலமைச்சர் முகஸ்டாலின் 73வது பிறந்தநாள் முன்னிட்டு தமிழகம் முழுவதும் திமுகவினர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக விளையாட்டு அணி சார்பில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி. ராதாகிருஷ்ணன் தலைமையில், திம்மசமூத்திரம் கிராமத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக காஞ்சிபுரம்திமுகதெற்கு மாவட்ட செயலாளர், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்களுக்கான சிறப்பு திட்டங்களை நிறைவேற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வந்து அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாகியது திராவிடமாடலஅரசுமேலும் பெண்களுக்கான திட்டங்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண் திட்டம், பேருந்துகளில் இலவச பயணம் மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கோடை கால சிறப்பு ஊக்கத்தொகையுடன் 5000 ரூபாய் ஒவ்வொரு குடும்பதலைவிகளுக்கும் வழங்கியது திராவிட மாடல் அரசின் சாதனையாக பெண்கள் மத்தியில் எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்சிவிஎம்பிஎழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டு 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சுட சுட சிக்கன் 65 உடன் கூடிய சிக்கன் பிரியாணி வழங்கினர், மேலும் 1000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலை வழங்கி, திம்ம சமுத்திரம் ஊராட்சியில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு 25 கிலோ அரிசி சிப்பம் வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர் பி எம் குமார் மாநகர செயலாளர்சி கே வி தமிழ்ச்செல்வன் தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ் சுகுமார் ஒன்றிய குழு பெருந்தலைவர் மலர்க்கொடி குமார், ஒன்றிய துணை செயலாளர் எஸ்வி ரமேஷ், ஒன்றிய கவுன்சிலர் ஜெயவர்மன் பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர் புல்லட் தேவேந்திரன், துணைத் தலைவர் சுந்தரம், திமுக அயலக அணி மாவட்ட அமைப்பாளர் பி. நீலகண்டன் மற்றும் திமுக நிர்வாகிகள் சி எஸ் விஜி, ஆடலரசு, இளஞ்செழியன், பவுல்ராஜ் மற்றும் ப்ரிம்மிங் சிபிஎஸ்சி மேல்நிலைப் பள்ளி இயக்குனர்கள் தயாநிதி, கல்யாணசுந்தரம் உள்ளிட்டோர்கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி ஈசி பிட்னஸ் ஸ்போர்ட்ஸ் அகடாமியில் மாணவ & மாணவியர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி



தூத்துக்குடி ஈசி பிட்னஸ் ஸ்போர்ட்ஸ் அகடாமியில் மாணவ & மாணவியர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி அளிக்கப்பட்டது தூத்துக்குடியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மன அழுத்தம் இல்லாமல் மனது வலிமையோடும் உடல் வலிமையோடும் கராத்தே போட்டிகளிலும் தடகளப் போட்டிகளிலும் விளையாட்டுத்துறைகளுக்கான போட்டிகளிலும் திறமையோடு சாதனை படைத்து வாழ்வதற்கு தூத்துக்குடி ஈசி பிட்னஸ் ஸ்போர்ட்ஸ் அகடாமியில் பயிற்சியாளர் A. இமானுவேல் அவர்களால் ஒரு மாத காலம் கட்டணம் இல்லாமல் பயிற்சிகள் அளிக்கப்பட்டது இதில் 200க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிகள் பெற்று பயனடைந்தனர் ஞாயிறு அன்று பயிற்சிகள் நிறைவு விழாவும் பயிற்சிகள் பெற்றோர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா ஆலோசனை விழாவும் நடைபெற்றது இந்த விழாவில் ஏசி பிட்னஸ் நிறுவனரும் பயிற்சியாளர் A.இமானுவேல் அவர்கள் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார் மேலும் சிறப்பு விருந்தினர்கள் J C H GF JCI தூத்துக்குடி BLUE SEA தலைவர் பரமசிவன் மற்றும் துணைத் தலைவர் J FM ஜூனு பயிற்சி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள் மேலும் கோஸ்டல் பவர் ப்ளான்ட் பரமேஸ்வரன் MD அவர்கள் மற்றும் மாவட்டதொழில் சங்க செயலாளர் இசக்கி அவர்களும் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள் மேலும் பயிற்சி அளித்த பயிற்சியாளர்கள் சிவபெருமாள் மாரீஸ்வரன் சோபியா ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள் வருகை தந்த அனைவருக்கும் ஈசி பிட்னஸ் சென்டர் சார்பில் காலை உணவு வழங்கப்பட்டது

# திருவண்ணாமலை: குப்பநத்தம் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு



சென்னை,

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் நீர்த்தேக்கத்திலிருந்து 47 ஏரிகளில் குறைந்துள்ள தண்ணீரின் கொள்ளளவை நிரப்பும் பொருட்டு 03.03.2026 அன்று காலை 10.00 மணி முதல் 31.03.2026 அன்று காலை 10.00 மணி முடிய வினாடிக்கு 240 கன அடி வீதம் 28 நாட்களுக்கு ஒரே தவணையாக 580.80 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் 9432.76 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பாசனவசதி பெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹிட்லரை விட மிகக் கொடிய குற்றவாளியாக விளங்குபவர் ட்ரம்ப் பழ.நெடுமாறன் கண்டனம்



சென்னை,

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் டிரம்ப் படையெடுப்பு குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார் அதில் அவர் கூறியதாவது,

மறைந்த பாசிசத் தலைவர் ஹிட்லரை விட மிகக் கொடிய குற்றவாளியாக ட்ரம்ப் உலகிற்கே பேரபாயமாகத் திகழ்கிறார்

உக்ரைன் நாட்டு அதிபரை பொதுவெளியில் அவமதித்தார்.

வெனிசுலா நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டின் அப்பாவி பொது மக்களைகொன்றுகுவித்து அந்நாட்டின் அதிபரையும் துணைவியாரையும் கைது செய்து தூக்கி வந்து சிறை வைத்தார்.

இப்போது ஈரான் மீது படையெடுத்து பேரழிவை ஏற்படுத்தி அந்நாட்டின் தலைவர் கமேனியை படுகொலை செய்துள்ளார். தொடர்ந்து உலகில் எந்த நாடும் பாதுகாப்பாக இருக்க முடியாது என்ற சூழலை உருவாக்கியுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்பின் வெறியாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உலக நாடுகளுக்கு உண்டு.

அதை உடனடியாக செய்ய முன்வருமாறு உலக நாடுகளை வேண்டிக்கொள்கிறேன் என்று அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# மதுரையில் அரசு பஸ் மோதி பிளஸ் 2 மாணவி உயிரிழப்பு



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே உள்ளஆவியூர்பகுதையை சேர்ந்தவர் கண்ணன். இவரது மகள் துர்கா தேவி (வயது 17) இவர் மதுரை தெப்பக்குளம் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் பிளச் 2 படித்து வருகிறார்.

இந்தநிலையில்மாணவி துர்கா தேவி இன்று பிளஸ் 2 வகுப்பு பொது தேர்வு எழுதுவதற்காக ஆவியூரிலிருந்து மதுரைக்கு அவரது தந்தையுடன் இருசக் கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

அப்போது அல்லிக்குளம் பகுதியில் இருந்து மதுரை பெரியார் பேருந்து நிலையம் நோக்கி சென்ற அரசு பஸ் எதிர்பாராதவிதமாகதுர்கா தேவி வந்த பைக் மீது மோதியது.

இதில் மாணவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டசபை தேர்தலில் போட்டியிடும் சென்னை மேயர் பிரியா



கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மார்ச் மாதம் 4ந் தேதி, முதல் தலித் பெண் மேயராக பதவி ஏற்றவர், பிரியா ராஜன். இவருடன் திமுக கவுன்சிலர்களாக பதவி ஏற்றவர்களில் பலர், 2021 ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்கள். இந்த நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் பதவிக்காலம் முடிய இன்னும் ஒரு ஆண்டு காலமே இருப்பதால், 10க்கும் மேற்பட்ட கவுன்சிலர்கள் சட்டசபை தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

திரு.வி.க. நகர் தொகுதியில் போட்டி

திமுக தலைமையிடம் வாய்ப்பு கேட்டு விருப்ப மனு தாக்கல் செய்துள்ள இவர்கள், சென்னையை சேர்ந்த அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோரிடம் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

குறிப்பாக, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார் ஆகியோர் சட்டசபை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கேட்டு வருகிறார்கள். மேயர் பிரியா திரு.வி.க. நகர் தொகுதியிலும், துணை மேயர் மகேஷ்குமார் வேளச்சேரி தொகுதியிலும் போட்டிட வாய்ப்பு கேட்கிறார்கள்.

பச்சை கொடி காட்டிய திமுக தலைமை

திரு.வி.க. நகர் தொகுதியில், தற்போது திமுகவை சேர்ந்த தாயகம் கவி எம்.எல்.ஏ.வாக இருந்து வருகிறார். இவர் சைதாப்பேட்டை பகுதியை சேர்ந்தவர் என்றாலும், தனித் தொகுதி என்பதால் திரு.வி.க. நகர் தொகுதியில் கடந்த 2 முறை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இந்த முறை திரு.வி.க.நகர் தொகுதி சென்னை மேயர் பிரியாவுக்கு வழங்கப்படும் என்று தெரிகிறது. கட்சித் தலைமை இதற்கு பச்சை கொடி காட்டிவிட்டதாகவும், மேயர் பிரியாவும் திரு.வி.க.நகர் தொகுதியில் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேபோல், இந்த முறை சென்னை மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் 5 பேருக்கு சட்டசபை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிகிறது.

# ஈரான் ஆதரவு போராட்டங்களை முடக்க முயல்வது கண்டிக்கத்தக்கது: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி



ஈரான் ஆதரவு போராட்டங்களை முடக்க முயல்வது கண்டிக்கத்தக்கது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளுக்கு, எதிராக அமெரிக்க மற்றும் இஸ்ரேல் ராணுவம் ஈரான் மீது போர் தொடுத்துள்ளன. இது ஈரானின் இறையாண்மைக்கு எதிரானது. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், சர்வாதிகாரப் போக்குடன் செயல்படுகிறார்.

அமெரிக்க காங்கிரஸின் இரு அவைகளின் அனுமதி இன்றியே, ஈரான் மீதான போரை டிரம்ப் துவக்கி உள்ளார். இது அந்நாட்டின் அரசியல் சட்டத்திற்கே எதிரானதாகும். அமெரிக்காவிலேயே அந்நாட்டு மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மிக முக்கிய அரசியல் தலைவர்களும் டொனால்டு டிரம்புக்கு எதிராக கண்டனம் தெரிவித்து, போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய அரசு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை கண்டிப்பதற்கு தயங்குகிறது. அமெரிக்கா இஸ்ரேல் தாக்குதலை தொடர்ந்து ஈரானும் மேற்காசியாவில் உள்ள அமெரிக்காவின் ராணுவ தளங்களை தாக்கி வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் பதட்டமான சூழ்நிலை உருவாகி உள்ளது. மேற்காசிய நாடுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய உயிர் மற்றும் உடைமைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்தெல்லாம் கவலைப்படாத மத்திய மோடி அரசு, ஈரானுக்கு ஆதரவு தெரிவிக்காத மத்திய அரசு, அமெரிக்க இஸ்ரேல் அட்டூழியத்தை கண்டிக்க துணிவு இல்லாத மத்திய அரசு, தற்பொழுது அனைத்து மாநிலங்களுக்கும் உள்துறை அமைச்சகம் மூலம் சுற்றறிக்கை அனுப்பி உள்ளது.

அச்சுற்றறிக்கையில், இந்தியாவில் நடைபெறும் ஈரானுக்கு ஆதரவான போராட்டங்களை கண்காணிக்குமாறும், போராடும் அமைப்புகள் மற்றும் குரல் கொடுக்கும் தனிநபர்களை கண்காணிக்குமாறும் வலியுறுத்தியுள்ளது. இது ஈரானுக்கு ஆதரவான போராட்டங்களை முடக்கும் நோக்கம் கொண்டது.

இந்தியா எப்போதுமே உலக சமாதானத்தை, அமைதியை விரும்புகின்ற நாடாகும். அணி சேரா நாடாகும். பிரதமர் மோடி பதவிக்கு வந்தது முதல், நமது வெளியுறவுக் கொள்கையில் பிற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இஸ்ரேல் ஆதரவு நிலையை மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக, அமெரிக்க இஸ்ரேல் மேற்கொள்ளக்கூடிய ஈரானுக்கு எதிரான, இந்த ஆக்கிரமிப்புப் போரை ஆதரித்து வருகிறது. ஈரான் ஆதரவு போராட்டங்களையும் முடக்கிவிட முனைகிறது.

எனவே, இந்திய மக்கள் போருக்கு எதிரான இயல்பான மனநிலையுடன் ஈரானுக்கு ஆதரவாகவும், அமெரிக்க இஸ்ரேலிய அரசுகளைக் கண்டித்தும் போராட்டம் நடத்துகின்றனர். இந்தப் போராட்டங்களை முடக்க நினைப்பது ஏதேச்சதிகார, நடவடிக்கையாகும்.

ஜனநாயக விரோத இத்தகையப் போக்கை உடனடியாக மத்திய மோடி அரசு கைவிட வேண்டும் என, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

03.03.2026

## திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே 2 கிலோ கஞ்சா பறிமுதல்: பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர் கைது



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே கஞ்சா விற்பனை செய்ததாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இளைஞரை மதுவிலக்கு போலீசார் கைது செய்து 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்துள்ளனர்.

திருப்பூர் – தாராபுரம் புறவழிச்சாலையில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகே, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கமல் தேவ் மகன் சங்கர் குமார் (29) சந்தேகத்துக்கிடமானவகையில்நின்று கொண்டிருந்தார். அப்போது அருகிலிருந்த கடையிலிருந்து மதுவிலக்கு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து மதுவிலக்கு பிரிவு துணை ஆய்வாளர் லோகநாதன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, சங்கர் குமாரிடம் விசாரணை நடத்தினர். அவர் தோளில் மாட்டியிருந்த பையை சோதனை செய்தபோது தப்பிச் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. போலீசார் அவரை சுற்றிவளைத்து பிடித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், திருப்பூர் அவிநாசி டி.கே.டி. மில் வளாகம், தேவம்பாளையம் பகுதியில் வாடகை வீட்டில் தங்கி வந்தவர் என்றும், வேலை இல்லாத நேரங்களில் கஞ்சா விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது. மேலும் கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சாவிற்பனை செய்ய கொண்டு வந்திருந்ததும் போலீசார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. அதன் மதிப்பு சுமார்ரூ.25ஆயிரம்எனகூறப்படுகிறது. பின்னர் சங்கர் குமாரை தாராபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிபதியின் உத்தரவின் பேரில் கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

## சேத்திரபாலபுரம் சப்த கன்னியம்மன் ஆலய மாசி மகம் திருவிழா விரதம் இருந்த பக்தர்கள் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்:



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த குத்தாலம் தாலுக்கா சேத்திரபாலபுரம் சப்த கன்னியம்மன் ஆலய மாசி மகம் திருவிழா நடைபெற்றது முன்னதாக காவிரி ஆற்றங்கரையில் இருந்து சக்தி கரகம் பக்தர்கள் பால்குடங்களை தலையில் சுமந்தவாறு வான வேடிக்கை மேலதாள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக ஆலயத்தை வந்து அடைந்தனர் பின்னர் பக்தர்கள் கொண்டு வந்த பாலினை கொண்டு அம்மனுக்குபால்அபிஷேகமும்மஹா தீபாராதனையும் காண்பிக்கப்பட்டது இவ்விழாவில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சப்த கன்னியம்மனை வழிபட்டுச் சென்றனர் தொடர்ந்து பக்தர்கள் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இவ்விழா ஏற்பாடுகளை இளைஞர் நற்பணி மன்றத்தினர் மகளிர்சுய உதவி குழுக்கள் இராமாமிர்தம் தெருவாசிகள் நாராயணசாமி நகர்வாசிகள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## நாகப்பட்டினம் பிரசித்திபெற்ற வெளிப்பாளையம் அகத்தீஸ்வரர் ஆலயத்தில் நூறு ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்ற தேரோட்டம்



நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அகத்தீஸ்வரர் உடனுறை ஆனந்தவல்லி தாயார் கோவில் புகழ்பெற்ற தேவாரப்பாடல்பெற்ற சிவஸ்தலமாகும். அகத்திய முனிவர் சிவனை வழிபட்ட தலமாகும். இந்த திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத்துறை பக்தர்கள் உதவியுடன் சார்பில் 40 லட்ச ரூபாய் செலவில் சுவாமிக்கு புதிய தேர் செய்யப்பட்டது. இந்நிலையில் நூறு ஆண்டுகளுக்குப் பின் மாசி மக திருவிழாவை முன்னிட்டு நேற்று திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆலயத்தில் இருந்து சிவ வாத்தியங்கள் முழங்க அகத்தீஸ்வரர், ஆனந்தவல்லி தாயார் திருத்தேருக்கு எழுந்து அருளினார். அதனைத் தொடர்ந்து

திருத்தேரினை துணை ஆணையர் ராணி மற்றும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர். அதனை தொடர்ந்து பக்தர்கள் திருத்தேரில் அமர்ந்திருந்த அகத்தீஸ்வரர், ஆனந்தவல்லி தாயாருக்கு பூஜை செய்து ஆரூரா தியாகேசா என பக்தி பரவசத்துடன் தேரினை இழுத்து வர,தேரானது முக்கிய வீதிகள் வழியாக சென்றது. திருத்தேரோட்ட நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## இன்றைய ராசி பலன்கள் (03.03.2026)

**மேஷம்:** புதிய தொடக்கங்களுக்கு நல்ல நாள். வேலை தொடர்பான முடிவுகளில் தெளிவு கிடைக்கும். குடும்பத்தில் சிறிய கருத்து வேறுபாடு இருக்கலாம்; அமைதியாக சமாளிக்கவும். பணவரவு சாதாரணமாக இருக்கும்.

**ரிஷபம்:** நிதி விஷயங்களில் கவனம் தேவை. செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. நண்பர்கள்மூலம்நல்லதகவல்கிடைக்கும். உடல்நலத்தில் சிறிய சோர்வு இருக்கலாம்.

**மிதுனம்:** தொழிலில்முன்னேற்றம்.புதியவாய்ப்புகள் வரலாம். உறவுகளில் புரிதல் அதிகரிக்கும். பயணம் செய்யும் சாத்தியம் உள்ளது.

**கடகம்:** குடும்பம் மற்றும் வீட்டுச் செயல்களில் கவனம் செலுத்த வேண்டிய நாள். பண விஷயங்களில் லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மன அமைதி முக்கியம்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கலாம். காதல் மற்றும் உறவுகளில் இனிமை அதிகரிக்கும்.

**கன்னி:** சிறிய தடைகள் இருந்தாலும் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. திட்டமிட்டு செயல்படுங்கள்..

**துலாம்:** சமநிலை காக்க வேண்டிய நாள். தொழிலில் மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு.

**விருச்சிகம்:** பண விஷயங்களில் முன்னேற்றம். புதிய முதலீடுகளை யோசிக்கலாம். நண்பர்களுடன் நேரம் செலவிடுவது மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** பயணம் அல்லது புதிய கற்றல் வாய்ப்பு கிடைக்கலாம். தொழிலில் உழைப்புக்கு பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் கவனம் அவசியம்.

**மகரம்:** பொறுப்புகள் அதிகரிக்கும் நாள். குடும்ப ஆதரவு கிடைக்கும். பணவரவு நிலையாக இருக்கும்.

**கும்பம்:** புதிய யோசனைகள் வெற்றியளிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்..

**மீனம்:** உள்ளுணர்வு அதிகரிக்கும் நாள். கலை மற்றும் படைப்பாற்றலில் முன்னேற்றம். நிதி விஷயங்களில் கவனம் தேவை.

## காங்கேசன் துறைக்கு மார்ச் 6 முதல் மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து




நாகை துறைமுகம் இலங்கையின் காங்கேசன் துறைமுகம் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து மார்ச் 6ஆம் தேதி முதல் மீண்டும் தொடங்கப் படும் என தனியார் (சுபம்) கப்பல் நிறுவனம் தெரிவித்துள் ளது.

இதுகுறித்து கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுந்தர்ராஜன் செய்தியாளர்களிடம் கூறியது: நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன் துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் (சிவகங்கை) வாரத்தில் 6 நாள்கள் இயக்கப்பட்டு வருகிறது. பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த 2025 நவம்பர் மாதம் முதல் நாகை காங்கேசன் துறை இடையே இக்கப்பல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த பயணிகள் கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறைக்கு வரும் 6 ஆம் தேதியில் இருந்து மீண்டும் இயக்கப்படும். பயணிகள் கட்டணம், எடுத்துச் செல்லும் சரக்கு அளவு ஆகியவற்றில் எந்தவித மாற்றமும் இல்லை. புதிய கப்பல் பணிகள் நிறைவடைந்து, அதை இயக்குவதற்கான அனைத்து சான்றிதழ்களும் பெறப்பட்டு விட்டன. இம்மாதம் 2 ஆம் வாரத்திற்குள் புதிய கப்பல் நாகை துறைமுகத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## தனுஷ் நடிக்கும் “கர” படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் அப்டேட்




நடிகர் தனுஷ் நடிக்கும் 54வது படத்தை 'போர் தொழில்' படத்தின் மூலம் அறிமுகமான விக்னேஷ் ராஜா இயக்கியுள்ளார். இந்த படத்தில் மமிதா பைஜு, கே.எஸ். ரவிகுமார், கருணாஸ், ஜெயராம், பிருத்வி பாண்டியராஜன், சுராஜ் வெஞ்சரமூடு, எம்.எஸ். பாஸ்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டைட்டில் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இந்த படத்துக்கு ‘கர’ என்று பெயரிடப்பட்டுள்ளது. டைட்டில் வீடியோவில் தனுஷ் பேசும், வசனங்கள் ரசிகர்களை கவர்ந்தன.

சமீபத்தில் படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், வெளியீட்டிற்கான பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் ஐசரி கே.கணேஷ், ‘கர’ திரைப்படம் வரும் ஏப்ரல் மாதம் வெளியாகும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தனுஷ் ரசிகர்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், தனுஷ் நடிக்கும் “கர” படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் விரைவில் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

## அமெரிக்கா ஈரான் போரில் மக்கள் உயிர்கள் பறிபோவது வருத்தமளிக்கிறது மம்முட்டி

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நேற்று முன்தினம் அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அவரது குடும்பத்தினர், ஈரான் பாதுகாப்புத்துறை மந்திரி அமீர், ஈரான் புரட்சிப்படை தளபதி முகமது உள்பட பலர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இதற்கிடையில் பஹ்ரைன், கத்தார், சவுதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தியது. அதே சமயம், ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் தொடர்ந்து ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கேரள மாநிலம் கொச்சியில் நிகழ்ச்சியில் இஸ்ரேல் ஈரான் போர் குறித்து கருத்து கூறியுள்ளார். அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் போரில் யார் வெற்றி பெறுவார்கள் என்று எனக்கு தெரியாது. போர் எதற்கும் தீர்வாகாது. ஆனால், மனிதம் வெற்றி பெற வேண்டும் என்பதே என் விருப்பம்.அப்பாவி மக்களின் உயிர்கள் பறிபோவது வருத்தமளிக்கிறது என்று நடிகர் மம்முட்டி கவலை தெரிவித்துள்ளார்.

## சல்மான் கான் மிகவும் கூலானவர் கங்கனா ரனாவத்



நடிகையும் அரசியல்வாதியுமான கங்கனா ரனாவத், தனது கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படுத்துவதில் பெயர் பெற்றவர். பல ஆண்டுகளாகத் திரைத்துறை மீதான தனது அதிருப்தியைத் தெரிவித்து வரும் அவர், சக பிரபலங்கள் குறித்த தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளத் தயங்கியதே இல்லை. இதற்கிடையே, இந்தியாவின் வளர்ச்சி குறித்து பல்வேறு துறை வல்லுநர்கள் விவாதிக்கும் ‘ரைசிங் பாரத் மாநாடு 2026’ டெல்லியில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட கங்கனா ரனாவத்திடம் சல்மான் கான், ஷாருக்கான், ஆமிர் கான், கரண் ஜோஹர் மற்றும் ஆதித்யா சோப்ரா உள்ளிட்ட பலர் குறித்து கேட்கப்பட்டது.

‘சல்மான் கான், ஷாருக்கான் மற்றும் அமீர் கான் ஆகிய மூவரில் உங்கள் நெருங்கிய நண்பர் யார்?’ என்ற கேள்விக்கு, ‘இவர்கள் எப்போது என் நண்பர்களானார்கள்?’ என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார். எனினும், உங்களுக்கு யாரை மிகவும் பிடிக்கும் என்று மீண்டும் கேட்கப்பட்டபோது, ‘சல்மான் மிகவும் கூலானவர் என்று நினைக்கிறேன்’ என்றார். அடுத்ததாக அனன்யா பாண்டே, ஜான்வி கபூர் மற்றும் சாரா அலி கான் ஆகியோரில் சிறந்த நடிகை யார் என்ற கேள்விக்கு சிரித்துக்கொண்டே, ‘அனன்யா பாண்டேவை தேர்ந்தெடுப்பேன்’ என்றார்.

அனுராக் காஷ்யப், கரண் ஜோஹர் மற்றும் ஆதித்யா சோப்ரா ஆகியோரில் சிறந்த இயக்குனர் யார் என்ற கேள்விக்கு ‘திரைப்படம் மற்றும் நடிப்பு குறித்த எனது ரசனையும் தரமும் உங்கள் தரத்தைப் போல அவ்வளவு தாழ்வானது அல்ல. குறைந்தபட்சம் ஒரு நல்ல பட்டியலையாவது நீங்கள் தயாரித்திருக்க வேண்டும்’ என்று யார் பெயரையும் குறிப்பிடாமல் விமர்சித்தார்.

## இந்தியாவுக்கு எதிரான தோல்வி குறித்து வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் கூறியது என்ன.?




டி20 உலகக் கோப்பை தொடரின் 52வது லீக் ஆட்டத்தில் இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 195 ரன்கள் குவித்தது. ரோஸ்டன் சேஸ் 40 ரன்னும், ஹோல்டர் 37 ரன்னும், பாவெல் 34 ரன்னும் எடுத்தனர்.அடுத்து களமிறங்கிய இந்தியா 19.2 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 199 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றதுடன், அரையிறுதிக்கும் முன்னேறி அசத்தியது. அதிரடியாக ஆடி 97 ரன்கள் குவித்து இந்திய அணியை வெற்றிபெற வைத்த சஞ்சு சாம்சனுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அணியின் தோல்வி குறித்து வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஷாய் ஹோப் பேசியதாவது;

"நாங்கள் போதிய அளவு ரன்களை சேர்க்கவில்லை என்று நினைக்கிறேன். ஏனெனில் இந்த மைதானத்தில் இது எட்டக்கூடிய இலக்காக இருந்தது. நாங்கள் தொடக்கத்திலும், இறுதியிலும் கூடுதல் கவனத்துடன் செயல்பட்டு மேலும் அதிக ரன்களை சேர்த்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஹெட்மயர் களமிறங்கியது முதலே அதிரடியாக தொடங்கினார். அந்த சமயத்தில் நாங்கள் சிறப்பான நிலையில் இருந்ததாக உணர்ந்தோம். மேலும் மேத்யூ ஃபோர்ட் மற்றும் அகீல் ஹொசைன் ஆகியோரும் பௌலிங்கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆனாலும் எங்களால் இன்று வெற்றி பெற முடியவில்லை.

சஞ்சு சாம்சன் அருமையான ஒரு ஆட்டத்தை விளையாடினார். ஏனெனில் இதுபோன்ற மைதானத்தில், அதிலும் குறிப்பாக இரவு நேரத்தில் சேஸிங் செய்யும் போது அது சற்று கடினமாக இருக்கும். ஆனால் அவர் அதைப்பற்றி எதையும் எடுத்துக் கொள்ளாமல் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். சஞ்சு சாம்சன் ஒரு தரமான வீரர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் விளையாடிய ஆட்டம் மிகவும் மதிப்பு மிக்கது. ஏனெனில் இன்று அவரது பேட்டிங் மிகவும் புத்திசாலித்தனமாக இருந்தது. இன்று அவர் விளையாடிய விதத்தைப் பொறுத்தவரை நீங்கள் அவருக்கு 'ஏ' பிளஸ் ரேட்டிங் கொடுக்க வேண்டும்." இவ்வாறு அவர் கூறினார்.

## சஞ்சு சாம்சனுக்கு கேரள நடிகர்கள், அரசியல் தலைவர்கள் பாராட்டு



டி20 உலகக் கோப்பை தொடரின் 52வது லீக் ஆட்டத்தில் இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 195 ரன்கள் குவித்தது. ரோஸ்டன் சேஸ் 40 ரன்னும், ஹோல்டர் 37 ரன்னும், பாவெல் 34 ரன்னும் எடுத்தனர்.அடுத்து களமிறங்கிய இந்தியா 19.2 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 199 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றதுடன், அரையிறுதிக்கும் முன்னேறி அசத்தியது. அதிரடியாக ஆடி 97 ரன்கள் குவித்து இந்திய அணியை வெற்றிபெற வைத்த சஞ்சு சாம்சனுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்த நிலையில், கேரளாவில் இருந்து தற்போது இந்திய அணிக்காக விளையாடும் ஒரே கிரிக்கெட் வீரரான சஞ்சு சாம்சனின் இந்த சிறப்பான ஆட்டத்தை மலையாள முன்னணி நடிகர்கள் பாராட்டி வருகின்றனர்.

மோகன்லால், மம்முட்டி, பசில் ஜோசப் ஆகியோர் சஞ்சு சாம்சனை பாராட்டி பதிவிட்டுள்ளனர். அதே போல், கேரள முதல் மந்திரி, எதிர்க்கட்சித்தலைவர், சசிதரூர் ஆகியோரும் சாம்சனை பாராட்டி பதிவிட்டுள்ளனர்.

## இந்தியாவுக்கு எதிராக தோற்றதால் பாக். வீரர்களுக்கு ரூ.50 லட்சம் அபராதம்

தற்போது நடைபெற்று வரும் ஐசிசி டி20 உலக கோப்பையில் அரை இறுதிக்கு செல்லாமல் பாகிஸ்தான் அணி வெளியேறியது. சூப்பர் 8 சுற்றில் தோல்வியை சந்தித்த நிலையில், அரை இறுதிக்கு செல்லும் வாய்ப்பை தவறவிட்டது. இலங்கை அணிக்கு எதிரான கடைசி போட்டியில் வெற்றி பெற்றிருந்தாலும், நெட் ரன் ரேட் அடிப்படையில் வெளியேறியது. இது பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கும் பெருமை ஏமாற்றத்தை அளித்துள்ளது. குறிப்பாக இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் அணி அடைந்த தோல்வியால் கடும் கோபத்திற்கு ஆளான பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், தங்கள் சொந்த அணி வீரர்களுக்கு அபராதம் விதித்து உள்ளது.

2026 டி20 உலகக்கோப்பை தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெறத் தவறியதால், தேசிய அணியில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் தலா 5 மில்லியன் பாகிஸ்தான் ரூபாய் (இந்திய மதிப்பில் தோராயமாக 16 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய்)தலா ஒவ்வொரு வீரர்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தொகையானது வீரர்களின் சம்பளத்தில் இருந்து நேரடியாக பிடித்தம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியிடம் தோற்றதுதான் இந்த அபராதத்துக்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது.

தொடர் தோல்விகளால் விரக்தியடைந்துள்ள பாகிஸ்தான் ரசிகர்கள், கேப்டன் சல்மான் அலி ஆகா மற்றும் பிற மூத்த வீரர்களை கடுமையாக சாடி வருகின்றனர். அணியில் உள்ள மூத்த வீரர்களை நீக்கிவிட்டு இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. கடைசி சில ஐசிசி தொடர்களில் பாகிஸ்தான் அணி மோசமாக விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066